தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர்

மலர் . 7

ஆழிநிகர்படை சேர்ப்பாய் !

பொருள் சேர்ப்பாய் ! இன்பத்தை
ஆக்குவிப்பாய் !
ஊழியஞ்செய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே.
பிணி நீக்க எழுந்திரு நீ
இளந்தமிழா, *வரிப்புலியே*,
பிற்றை நாளுக்
கணி செய்யும் இலக்கியம் செய் !
அறத்தைச் செய் ! *விடுதலைகொள்*
அழகு நாட்டில்

— பாரதிதாசன் ('தமிழியக்கம்')

உள்ளுறை பக்கம்

1. குடும்பப் பெயராய்வு
(பரவாக்கோட்டை கிராமம்) ... 289
2. புதுமைப்பித்தன் படைப்புகள் 301
3. மயேச்சுரர் கூறும் யாப்பியற்
செய்திகள் ... 285
4. கதையாசிரியர்களும் உத்திகளும் ... 305
5. ஒரு திருக்குறளுக்குக் கம்பர் தரும்
விளக்கம்-II ... 313
6. ஐம்பொறி நுகர்ச்சிகள் 320
7. ஐயவினாக்கள் 334

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர்: 61 பிரபவ — ஐப்பசி மலர் : 7

அக்டோபர் — நவம்பர் 1987

குடும்பப் பெயராய்வு (பரவாக்கோட்டை கிராமம்)

சிங்கை. அய்யாப்பிள்ளை
தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

கிராமப்புற மக்களின் மரபு வழி வந்த படைப்புக்களையும் வழக்காறுகளையும் ஆய்வு செய்வதன் மூலம் பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் அறிந்து கொள்ளலாம். பெயராய்வினை ஆங்கிலத்தில் Onomastics என்பர்.

இதனை இடப்பெயர் ஆய்வு என்றும், மக்கட்பெயர் ஆய்வு என்றும், குடும்பப் பெயர்கள் ஆய்வு என்றும் பிரிக்கலாம். கிராமக் குடும்பப் பெயர்கள் பற்றி இங்கு ஆயப்படுகிறது.

குடும்பப் பெயர்கள்

குடும்பப் பெயர் ஆய்வு மேலை நாட்டில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. நம்மில் இவ்வகை ஆய்வை இதுவரை விரிவான முறையில் யாரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நம்மிடையே மேலை நாட்டினரைப் போன்று குடும்பப் பெயர் இல்லை என்பர்.[1] ஆனால் கிராமிய மக்கட் பெயர்களை கள ஆய்வின் மூலம் தொகுக்க முனையும் போது கிராமங்களில் தனித்தனியான பல்வேறு குடும்பப் பெயர்கள் வழக்கில் இருப்பது தெரிய வந்துள்ளது.

ஆய்வுக்களம்

பரவாக்கோட்டை என்ற கிராமம் இக்கட்டுரையின் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கிராமம் தஞ்சை மாவட்டம், மன்னார்குடி வட்டத்திலுள்ளது. மன்னார்குடியிலிருந்து மதுக்கூர் செல்லும் நெடுஞ்சாலையில் மன்னார்குடியிலிருந்து பன்னிரண்டு கி. மீ. தொலைவில் தெற்கே அமைந்துள்ளது. வேளாண்மை இவ்வூர் மக்களின் சிறப்பான தொழிலாகும். மொத்த மக்கள் தொகை பத்தாயிரத்து ஐநூற்று நாற்பத்தாறாகும். இவ்வூரில் அகமுடைய இனமக்கள் எண்ணிக்கையில் அதிகமாக வசிக்கின்றனர்.

ஆய்வுக்களம் தேர்ந்தெடுக்கக் காரணம் :

சங்ககாலம் தொடங்கி இன்று வரையுள்ள மக்கட் பெயர்களைத் தொகுத்து நோக்கி நூற்று ஐம்பத்து இரண்டு வகைகளில் அவை அமைந்துள்ளன என்பர். (சக்திவேல், சு. மு. நூ. பக். 77—156). இயற்பெயருக்குப் பின்னர் இனப் பெயரினை (குலம்/சாதி) இட்டு வழங்கும் முறை பல்லவர் காலத்திலிருந்து தொடங்கி இன்று வரை எல்லா இன மக்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் செட்டியார் இன மக்கள் குடும்பப் பெயர் + இயற்பெயர் + இனப் பெயர் என்ற அடிப்படையில் தங்கள் பெயர்களை அமைத்துக் கொண்டனர். இவ்வமைப்பு முறை பெரும்பான்மையாக வழக்கில் இல்லை.

1. சக்திவேல், சு. 'மக்கட் பெயராய்வு' நாட்டுப்புறவியல் தொகுதி 2 (1985) ப142.

தஞ்சை மாவட்டத்தில் கிராமங்களில் வாழும் அகமுடைய இன மக்கள் பரவலாகச் சில குடும்பப் பெயர்களின் கீழ் அடையாளம் சுட்டப் பெறுகின்றனர். பரவாக்கோட்டை கிராம மக்கள் அனைவரும் குடும்பப்பெயர் + தந்தைபெயர் + இயற்பெயர் + இனப் பெயர் என்ற நான்கு அலகுகளின் இணைப்பு முறையில் பெயரிட்டுக் கொள்வதால் இக்கிராமம் ஆய்வுக் களமாகத்தேர்வு செய்யப்பட் டுள்ளது. குறிப்பாக இவ்வூரின் மொத்த மக்கள் தொகையில் அகமுடைய இனமக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதால் (95%) அகமுடையரின் குடும்பப் பெயர்களே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டுரைக்கான தரவுகள் 1987 மே திங்கள் 5ஆம் நாள் முதல் 15ஆம் நாள் வரை களப்பணி மூலம் சேகரிக்கப்பட்டன.

குடும்பப் பெயர்கள் அமைப்பும், வளர்ச்சியும் !

மக்கட் பெயர்களின் அடிப்படையில் குடும்பப் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பரவாக்கோட்டை கிராமத்தில் இன்று அறுபது குடும்பப் பெயர்கள் வழக்கில் உள்ளன இவற்றில் தோற்றம், வளர்ச்கி நிலை இவ்வூரின் அனுபவம் மிக்க முதியவர்கள் பலர் அளித்த தரவுகள் அடிப்படையிலும் ஆய்வாளரின் களப்பணி மூலமாகவும் பட்டியல் இடப்பட்டுள்ளது:

குடும்பப் பெயர்களின் பகுப்பு முறை :

மேலை நாடுகளில் குடும்பப் பெயர்களை ஐந்து வகையாகப் பகுப்பர்[1]

அவை,

1. தனிமனிதனின் தோற்றம் அல்லது குணத்தை விளக்குபவை
2. முக்கியமான சம்பவம் அல்லது வீரச்செயல்களை விளக்குபவை.
3. தந்தையார் பிறருடன் கொண்டிருந்த தொடர்புகள் அடிப்படையில் அமைந்தவை.
4. தற்போதைய வாழ்விடம் அல்லது பூர்வீக வாழ்விடம் குறித்தவை

---

1. Family names can be classified into five groups
   1. They are descriptive of the person's appearance or Character
   2. They record an incident or exploit
   3. They identify him by his connection with some other person, usually his father
   4. They give his residence or former residence

5. தேர்ந்தெடுத்துக் கொண்ட தொழிலின் அடிப்படையில் அமைந்தவை.

எனக் கலைக் களஞ்சியத்தில் விளக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஐவகை மேல்நாட்டுப் பகுப்பில் மூன்றாவதாகக் குறிப்பிட்ட பிரமுகர்களின் தொடர்பு அடிப்படையில் அமைந்த குடும்பப் பெயர்கள் தவிரப் பிற நான்கு வகைப் பெயர் அமைவு முறைகள் பரவாக் கோட்டை கிராமக் குடும்பப் பெயர்ப் பகுப்பு முறையில் அடங்கி வருகின்றன.

இவ்வூரின் வழக்காறுகளில் இடம் பெற்று வரும் அறுபது குடும்பப் பெயர்களும் இயற்பெயரை அடிப்படையாகவும் காரணப் பெயரை அடிப்படையாகவும் கொண்டு அமைந்துள்ளன.

இயற்பெயர்கள்

இயற்பெயரைக் குடும்பப் பெயராகக் கொண்டு இருபது குடும்பப் பெயர்கள் அழைக்கப்படுகின்றன. பெருங்குடும்பப் பெயர்கள் பன்னிரண்டில் பத்துக் குடும்பங்கள் இயற்பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றன.

பெட்டை மறவன் குடும்பமும் அரக்கச்சி குடும்பமும் இவ்வூரின் பூர்வீகக் குடும்பங்களாகும். இவ்விரண்டு குடும்பங்களும் மக்கள் தொகையில் வளர்ந்து பன்னிரண்டு பெருங்குடும்பங்களாக இனம் சுட்டப்பெறுகின்றன. பன்னிரண்டு பெருங்குடும்பங்களின் சந்ததியர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் விரிவடைந்து நாற்பத்தாறு கிளைக்குடும்பங்களாக இன்று அழைக்கப்படுகின்றன.

குடும்பப் பெயர்களின் பயன்பாடு :

பரவாக்கோட்டையின் தோற்ற கால மக்கள் தங்களின் பூர்வீகக் குடும்பப் பெயர்களைத் தந்தை பெயருக்கு முன்னர்ப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். பின்னர்ப் பன்னிரண்டு பெருங்குடும்பங்களாக இவர்கள் அடையாளப் படுத்தப்பட்ட பிறகு பெருங்குடும்பப்

5. They specify occupation [Encycopaedia Britannica, (Persona' names) Vol 15, P 1158 1967.]

பெயர்களின் முதலெழுத்தைத் தந்தை பெயரின் முதலெழுத்துக்கு முன்னர் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

குடும்பப் பெயர்	+	தந்தை பெயர்	+	இயற் பெயர்	+	இனப் பெயர்	>	மக்கட் பெயர் (எழுத்து/பேச்சு)
சொக்கன் குடும்பம்	+	கந்தசாமி	+	தங்கவேல்	+	தேவர்	>	சொ.க. தங்கவேல் தேவர்
சேர்த்தன் குடும்பம்	+	சீனிச்சாமி	+	மாரியப்பன்	+	தேவர்	>	சே. சீ. மாரியப்பதேவர்
மன்னன் குடும்பம்	+	கலியபெருமாள்	+	முத்துசாமி	+	தேவர்	>	ம.க. முத்துசாமிதேவர்
குஞ்சான் குடும்பம்	+	பொன்னுசாமி	+	பொன்னையன்	+	தேவர்	>	கு. பொ. பொன்னையா தேவர்

மக்கள் தொகை பல்கிப் பெருகத் தொடங்கிய நிலையில் ஒரு சில குடும்பப் பெயர்களின் அடிப்படையில் இனம் காணுதலில் சிரமமும், குழப்பமும் ஏற்பட்டதால் பரம்பரை வளர்ச்சிக்கு ஏற்பப் பெருங்குடும்ப அங்கத்தினர்கள் பல கிளைக் குடும்பப்பெயர்கள் வழி அடையாளப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனர். குடும்பத்தினரின் தொகை அதிகமாகப் பெருகாத நிலை ஏற்பட்டதால் சொக்கன் குடும்பம், மன்னன் குடும்பம், குடிக்காட்டான் குடும்பம் ஆகிய மூன்றின் வழித் தோன்றல்கள் தங்களின் பெருங்குடும்பப் பெயரின் முதலெழுத்தையே இன்றுவரை பயன்படுத்தி வருகின்றனர். இம் மூன்று குடும்பத்திற்கும் கிளைக் குடும்பப் பெயர்கள் இல்லை.

பரவாக்கோட்டை கிராம மக்கட் பெயரை முதலெழுத்துக்களுடன் பட்டியல் செய்து நோக்கும்போது இவர்கள் குடும்பப் பெயரின் முதலெழுத்தைப் பயன்படுத்தும்போது பூர்வீகக் குடும்பப் பெயர் அல்லது தங்களின் பெருங் குடும்பப்பெயர் அல்லது கிளைக் குடும்பப் பெயர் இவற்றில் ஏதோ ஒன்றினைப் பயன்படுத்துகின்றனர்.

அரசு ஆவணங்களில் குடும்பப்பெயர் :

அரசுக்கும், மக்களுக்கும் நெருங்கிய தொடர்புடைய நிலவுடமைப் பதிவேடுகள், கடன் ஒப்பந்தப் பத்திரங்கள், வாக்காளர் பட்டியல், கிராமக் கூட்டுறவு சேவைச் சங்கப் பதிவேடுகள், நூலக உறுப்பினர் பதிவேடுகள், காவல்துறைக் குற்றப்பிரிவுப்

பதிவேடுகள், பள்ளிகளில் பெற்றோர் பெயர்ப் பதிவுகள் அனைத்திலும் குடும்பப் பெயர்களின் முதலெழுத்தைப் பயன் படுத்தியே மக்கட்பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

உறவு முறை :

பன்னிரண்டு பெருங்குடும்பத்தில் ஆறு பெருங்குடும்பங்கள் பெட்டை மறவன் குடும்பத்தின் மரபுவழிச் சகோதரக் குடும்பங் களாகும். எஞ்சியவை இன்னொரு பூர்வீகக் குடும்பமான அரக் கச்சி குடும்பத்தின் மரபு வழி சகோதரக் குடும்பங்களாகும். இவ்விரு குடும்பத்தினரும் மண உறவு கொண்டனர். எக்காரணத்தை முன்னிட்டும் சகோதரப் பெருங்குடும்பத்தினர் தங்களுக்குள் மன உறவு கொள்வதில்லை. இச்கிராமத்தின் பெரும்பான்மை அகமுடைய இனமக்கள் இரு தம்பதியரின் வழித்தோன்றல்கள் என்று ஓரளவு யூகிக்க முடிகிறது.

கிளைக் குடும்பப் பெயர்கள் நாற்பத்தாறில் பதினாறு பெயர்கள் மட்டும் இயற் பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டு வருபவை களாகும். ஒரு குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள், நற்பண்புகள் மிக்கவர்கள் சிறப்போடும் வசதியோடும் வாழ்ந்தவர்கள் என்ற தன்மைகளின் அடிப்படையில் இயற்பெயர்கள் குடும்பப் பெயர் களாய் வழங்கப்பெற்று வருகின்றன.

காடுகளை அழித்து மக்கள் வாழும் இடமாக மாற்றிய பெருமை கண்ணுத்தன், கீர்த்தன் குடும்பத்திற்கும் அம்பலகார இன மக்களை இவ்வூரில் முதன்முதலாகக் குடியமர்த்திய பெருமை அருள்முத்தன், அப்பூதன், சேர்த்தன் குடும்பத்தினர்க்கும் ஆதி திராவிடர்களை (பறையர் மட்டும்) முதன்முதலாக இவ்வூரில் குடியமர இடவசதி அளித்த பெருமை வெள்ளத்தன் குடும்பத்தாருக்கும் உண்டு. இக் குடும்பப் பெயர்கள் இன்றும் பெருமிதத்தோடு அக்குடும்ப வாரிசு களால் பேசப்பட்டு வருகின்றன.

காரணப் பெயர்கள் :

மக்களின் தோற்றம், தொழில், பண்பு, இடம், நம்பிக்கை அடிப் படையில் சமுதாயம் ஒருவனுக்கு இட்டு வழங்கும் பெயர் காரணப் பெயர் என்றழைக்கலாம். டாக்டர் ஆறு. இராமநாதன் அவர்கள்[1] 'சமுதாய நோக்கில் காரணப் பெயர்கள்' என்ற ஆய்வுக்கட்டுரையில் காரணப் பெயர்கள் பற்றிக் குறிப்பிடுவது முழுமையாகக் குடும்பப்

1. இராமநாதன், ஆறு., 'சமுதாய நோக்கில் காரணப் பெயர்கள்' நாட்டுப் புற இயல் ஆய்வுகள் 172 — 186 சென்னை 1979.

பெயர்களுக்கும் பொருந்தி வருகிறது. நாற்பது குடும்பப் பெயர்களும் ஒருசில காரணங்களின் அடிப்படையில் தனிமனிதனுக்கு இட்டு வழங்கிய பெயர்களாகும். இவை காலப்போக்கில் குடும்பப் பெயராக அடையாளமிட்டுக் காட்ட உதவியுள்ளன.

தொழில் குறித்தவை :

உப்புக்காரன் குடும்பம் — உப்பு வியாபாரம் செய்தமை.

கீற்று வண்டிக்காரன் குடும்பம் — கீற்று வியாபாரம் செய்தமை.

தோற்றம் குறித்தவை

உறுப்பு	உருவம்	நிறம்
பொட்டை மறவன்	இளைத்தவன்	வெள்ளையன்
பொட்டச்சி	பரட்டையன்	சூரியன்
பல்லன்	மொட்டையன்	
	கூழையன்	
	சின்ன கொட்டை	
	பெரிய கொட்டை	

பண்பு குறித்தவை :

குடும்பப் பெயர்	காரணம்
அரக்கச்சி	வலிமை
அன்னமிட்டான்	ஈகை
புலிக்குட்டி	வீரம்
அய்யா	கிராமத்தலைமைப் பொறுப்பு
மன்னன்	வீரம்
நாடோடியான்	ஊர் ஊராகத் திரிந்தமை

செயல் குறித்தவை :

குடும்பப் பெயர்	காரணம்
தெய்வ குளத்தான்	கோயில் கட்டிக் குளமும் வெட்டியமை
கோடி வறுத்தான்	கொல்லைப்புறம் உணவுப் பொருள்களை வறுத்தமை
வார்க்காரன்	போரில் கலந்து கெண்டமை

உத்தண்டி	ஓடையில் ஊற்றுத் தோண்டி விளையாடியமை
பள்ளிக்கூடத்தான்	வெளியூரில் பள்ளிக்குச் சென்று படித்தமை

ஊர்ப்பெயர் குறித்தவை :

குடும்பப் பெயர்	காரணம்
தஞ்சாவூரான்	தஞ்சாவூரில் சில காலம் தற்காலிகமாக வாழ்ந்தமை
நாடியான்	நாடியம் (பட்டுகோட்டை வட்டம்) என்ற ஊரினைப் பூர்வீகமாகக் கொண்டமை
கண்ணுத்தன்	கண்ணுக்குடி என்ற ஊரைச் சேர்ந்தமை (பட்டுக்கோட்டை வட்டம்)
ஒரத்தநாட்டான்	ஒரத்தநாடு என்ற ஊரைப் பூர்வீகமாகக் கொண்டமை
ஓவேல்குடியான்	ஓவேல்குடி (ஒரத்தநாடு வட்டம்) என்ற ஊரைச் சார்ந்தமை
ஆலங்கோட்டையான்	ஆலங்கோட்டை (மன்னை வட்டம்) என்ற கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டமை
குடிக்காட்டான்	குடிக்காடு (மன்னை வட்டம்) என்ற கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டமை
நத்தத்தான்	நத்தம் (மன்னை வட்டம்) கிராமத்தைச் சேர்ந்தமை.

இருப்பிடம் குறித்தவை

பழவீட்டுக்காரன்	பாழடைந்த வீட்டில் வசித்தமை
புதுவீட்டுக்காரன்	புதிதாக வீடு கட்டியமை
கொல்லைக்காட்டான்	கொல்லையில் வீடு கட்டியமை
ஆலடிக்காத்தான்	ஆலமரத்தின் அருகில் வீடு கட்டியமை

பகுக்க இயலாதவை :

நண்ரான்
ஆவடை

குஞ்சான்

முதலி

தையநத்தான்

போன்ற குடும்பப் பெயர்கள் காரணப் பெயரா என அறிய இயலாத நிலையில் அவை இயற்பெயராகவே இங்கு கணக்கிடப்பட்டுள்ளன.

மரபு மாற்றம்

தற்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட இளைஞர்கள் பலர் குடும்பப் பெயரின் முதலெழுத்தை நீக்கித் தந்தை பெயரின் முதலெழுத்தை மட்டும் இயற்பெயருக்கு முன்னர் இட்டு வழங்குகின்றனர். இயற் பெயருக்குப் பின்னர் இனப் பெயரை (சாதிப் பெயரை)க் குறிப்பிடுவோர் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. வருவாய்த் துறையில் ஆணைம்படி நிலவுடைமைப் பதிவேடுகளில் மரபு வழியாகக் குடும்பப் பெயரிட்டு எழுதி வந்த முறையை மாற்றி 1987 முதல் இயற்பெயர் தந்தை பெயர் என்ற அமைப்பில் திருத்தம் செய்து வருகின்றனர். இம்மாற்றம் இன்றளவில் தொடக்க நிலையில் இருக்கிறது.

ஆய்வின் முடிவுரை :

1. பரவாக்கோட்டை கிராம மக்கள் அனைவரும் மரபு வழியாகக் குடும்பப் பெயரின் முதலெழுத்தைத் தந்தை பெயரின் முதலெழுத்துக்கு முன்னதாக இட்டு வழங்கி வருகின்றனர்.

2. இரண்டு பூர்வீகப் பழங்குடிகள் பன்னிரண்டு பெருங் குடும்பங்களாகப் பெருகியுள்ளன என அறிய முடிகிறது,

3. குடும்பங்களின் அடிப்படையில் முறையான மண உறவுகளைப் பின்பற்றி வருகின்றனர்.

4. வழக்கிலுள்ள அறுபது குடும்பப் பெயர்களில் இருபத்து நான்கு பெயர்கள் இயற் பெயர்களாகவும் முப்பத்தாறு பெயர்கள் காரணப் பெயர்களாகவும் அமைந்துள்ளன.

5. காரணப் பெயர்கள் தொழில், பண்பு, செயல், ஊர், இடம் ஆகியவை குறித்த அறுவகைப் பாகுபாட்டில் அமைகின்றன.

6. குடும்பப் பெயர்கள் மூலம் இந்தக் கிராம மக்கள் ஒருவரை மற்றவர் அடையாளம் கண்டு கொள்ளும் மரபு வழிப்பட்ட வழக்கம் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

7. குடும்பப் பெயரில் முதலெழுத்தைத் தந்தை பெயரில் முதலெழுத்துக்கு முன் இட்டு வழங்கும் முறை இன்றைய இளைய தலைமுறையினரிடம் மெல்ல மாறத் தலைப்பட்டுள்ளது.

பரவாக்கோட்டை கிராமக் குடும்பப் பெயர்கள்

பொட்டை மறவன்

(பூர்வீகக் குடும்பம் I)

1 ஆவது கரை	4 ஆவது கரை	5 ஆவது கரை	6 ஆவது கரை	11 வது கரை	12 ஆவது கரை
சொக்கன்	சேர்த்தன்	கீர்த்தன்	கண்ணுத்தன்	விஜயன்	குடிக்காட்டான்
	அய்யா	ஆலடிகாத்தான்	ஆவடை	கூழையன்	
	ஆவடை	பள்ளிகூடத்தான்	பொட்டச்சி	சிட்டன்	
	குஞ்சிதன்	தையநத்தான்	கீத்துவண்டி	தத்தத்தன்	
	தாப்புதான்	நண்ரான்		பரட்டையன்	
	சின்ன கொட்டை	மாடன்		புலிக்குட்டி	
	பெரியக் கொட்டை	மொட்டையன்		மொட்டையன்	
		வார்காரன்		முதலி	
				ஆலங்கோட்டையான்	

அரக்குச்சி

(பூர்வீகக் குடும்பம் II)

2 ஆவது	3 ஆவது	7 ஆவது	8 ஆவது	9 வது	10 ஆவது
கரை	கரை	கரை	கரை	கரை	கரை
அப்பூதன்	சின்னங்கான்	அருன் முத்தன்	மன்னன்	வெள்ளையன்	குஞ்சான்
வேலப்பட்டன்	கோடி வறுத்தான்	அப்புலிங்கம்		சாமிநாதன்	உத்தண்டி
சித்ரப்பட்டன்	நாடியான்	பல்லன்		பொதிய பட்டன்	ஓவேல்
					குடியான்
தெய்வ குளத்தான்	உப்புகாரன்	இளைத்தவன்		ஓரத்த நாட்டான்	நாடோடியான்
தஞ்சாவூரான்		இராயப்பன்		சூரியன்	பழவீட்டான்
		கொல்லைக் காட்டான்		சிந்தன்	அன்னமை

தரவுகள் தந்த தகவலாளர்களில் நினைவு கூரத்தக்கவர்கள்

	பெயர்	வயது	இனம்	கல்வி	நாள்
1.	இராமச்சந்திரன் க. (முன்னாள் கர்ணம்)	70	அய்யர்	எஸ்.எஸ்.எல்.சி.	6-5-87
2.	கரிகாலன், கூ. க. (வரலாற்று ஆய்வாளர்)	40	அகமுடையர்	எம்.ஏ.	9-5-87
3.	கிருஷ்ணசாமி, அ.வ. (மூத்த சான்றோர்)	80	அகமுடையர்	இல்லை	6-5-87
4.	கருணாநிதி, சி. (கூட்டுறவு சங்க எழுத்தர்)	60	வெள்ளாளர்	பி.ஏ.	7-5-87
5.	கணேசன், த. (கிராம தலையாரி)	54	கள்ளர்	ஐந்தாம் வகுப்பு	6-5-87
6.	சிங்கையன், க. பொ. (கல்விக் கமிட்டி உறுப்பினர்)	50	அகமுடையர்	எஸ் எஸ்.எல்.சி.	9-5-87
7.	தனபாலன், அ. வ. (கிராம பஞ்சாயத்தார்)	52	அகமுடையர்	எட்டாம் தகுப்பு	12-5-87
8.	பிச்சையன், ஆ. (காரியக்காரர்)	46	அம்பலகாரர்	இல்லை	6-5-87
9.	துரைக்கண்ணு, ப. (கி.நி. அலுவலர்)	36	பள்ளர்	பி ஏ	9-5-87
10.	முத்துவேல், கீ.சி. (கல்விக்கமிட்டி உறுப்பினர்)	56	அகமுடையர்	எட்டாம் வகுப்பு	7-5-87
11.	வேலுசாமி, சா.	60	பறையர்	இல்லை	14-5-87
12.	வேலாயுதம், சா.	48	செட்டியார்	இல்லை	9-5-87

தகவலாளர்கள் அனைவரும் பரவாக்கோட்டை கிராம வாசிகளாவர்.

புதுமைப்பித்தன் படைப்புகள் (தொகுதி-1)

[வெளியீடு : ஐந்திணைப் பதிப்பகம், 282 பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 - பக்கங்கள் 915 + 88 = 1003 - விலை : ரூ. 85/-]

> புகழ் இல்லாமல் இலக்கிய கர்த்தா உயிர் வாழ முடியாது. முகஸ்துதி வேண்டாம். இல்லாததை நீங்கள் சொல்லி விட வேண்டாம். செய்வ , சரிதான்; நன்றாயிருக்கிறது என்று சொல்லவாவது வேண்டாமா? நேர்மையான புகழ் இலக்கியக்கர்த்தாவிற்கு ஊக்கமளிக்கும் உணவு இதைக் கொடுக்கக்கூடிய சக்தியற்ற கோழையான ஒரு சமூகத்திற்கு என்ன எழுதிக் கொட்ட கொட்ட வேண்டியதிருக்கிறது. இதில் வாழும் கிரந்த கர்த்தா மனமிழந்து பாழாய்ப் போவான்.

புதுமைப்பித்தனின் மனப்புழுக்கம் இது. இவ்வரிகள் 'கடிதம் என்னும் அவருடைய கதையில் வரும் எழுத்தாளரின் உணர்வாக வெளிப்பட்டுள்ளன. இக்கதையை இப்படி முடிக்கிறார்.

"இந்த மாதிரி அசட்டுத்தனமான சமூகத்தை எப்படித் தூக்குவது.

கோழைத்தனம் பிறப்புரிமையாக இருக்கிற இந்தப் புழுக்களை மனிதர்கள் ஆக்குவது எப்படி ?

இருள் இருந்தால்தானே ஒளி. ஒளி வராமல் போய்விடுமா ? அதுவரை காத்திருக்க வேண்டியதுதான், எத்தனை காலமோ ?

ஒளிவரும் பொழுது நான் இருக்க வேண்டும் என்ற அவசியமுண்டா ? எனது சிருஷ்டிகள் இருந்தால் போதும்."

ஆம். இப்போது புதுமைப்பித்தன் இல்லை. ஆனால் அவன் படைப்புகள் இருக்கின்றன. புதுமைப்பித்தன் எதிர்பார்த்த ஒளி வந்து விட்டதா? இப்போது தமிழ்ச்சமூகம் சமகாலத்தின் உயிர்த்துடிப்புள்ள படைப்புகளை அடையாளங் காண்பதில் - அடையாளம் காண்பது இருக்கட்டும் அதற்கான முயற்சியிலாவது, புதுமைப்பித்தன் காலத்தை விட முன்னேறியிருக்கிறதா ? ஐயவினாதான்.

புதுமைப்பித்தன் சிறுகதைகளனைத்தையும் ஒரே தொகுதியாகக் கொண்டுவந்துள்ள இப்பணி, தமிழ்நூல் வெளியீட்டு வரலாற்றில் ஒரு துணிச்சலான, வரவேற்கத்தக்க முயற்சி.

இத் தொகுதியில் ஜெயகாந்தனின் 'அணிந்துரை', ரா. ஸ்ரீ தேசிகன் புதுமைப்பித்தனின் சிறுகதைத் தொகுதி யொன்றிற்கு 1940இல் எழுதிய 15 பக்க 'முன்னுரை', க. நா. சு., "புதுமையும் பித்தமும்" என்கிற தலைப்பில் எழுதியுள்ள, 62 பக்க, விமரிசன பூர்வமான அறிமுகம், வெளியீட்டாளரின் 'பதிப்புரை', புதுமைப்பித்தன் காஞ்சனை முதலிய பதினான்கு கதைகளடங்கிய தொகுதியொன்றிற்கு முன்னுரையாக 'எச்சரிக்கை' எனும் தலைப்பில் எழுதிய சுய அறிமுகம் ஆகியனவும் அடங்கியுள்ளன.

இந்நூலின் அச்சிலும், பதிப்பிலும் சில பிழைகள் உள்ளன வெனினும் அவை இந்நூல் வெளியீட்டுச் சாதனையின் முன் பொருட்படுத்தவேண்டாதவைதாம்.

ஆனால், அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ளும் பொருட்டும் அடுத்தடுத்த தொகுதிகளில் கவனம் செலுத்தும் பொருட்டும் சில சுட்டிக் காட்டப்பட வேண்டியவை.

"இந்தப் புத்தகத்தில் அடங்காமல் விட்டுப்போன புதுமைப் பித்தன் எழுதிய சிறுகதைகள் சில-ஒன்றிரண்டு இருக்கலாம். அதிகம் போனால் நாலைந்தும் இருக்கலாம். அவை கிடைத்தால் அவற்றையும் மறுபதிப்பில் சேர்த்துக் கொள்வார்கள் பிரசுர கர்த்தாக்கள் என்று நாம் நம்பலாம்" (பக்கம் XXV) என்கிற க. நா. சு. வின் நம்பிக்கை நினைவில் கொள்ளத்தக்கது.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள 'மன நிழல்' என்னும் சிறு கதை புதுமைப்பித்தனின் துணைவியாரால் எழுதப்பட்டதென்று சொல்லப்படுகிறது. (எம். வேதசகாய குமார், தமிழ்ச் சிறுகதை வரலாறு முதற்பகுதி, T.C. 24/28 Chithirika MG Road, Trivandrum, 1979 பக்கம்-103.)

'இலக்கிய மம்ம நாயனார் புராணம்' கதையின் அடிக்குறிப்பு (பக். 672-673) இரு தனிப்பத்திகள் போல் அச்சாகியுள்ளது அது ஒரே பத்தியாகத் தொடர்ச்சியாக அமைதல் வேண்டும்.

'புரட்சி மனப்பான்மை' என்கிற கதை உள்ள 469, 471 ஆம் பக்கங்களில் 'நிசமும் நினைப்பும்' என்கிற தலைப்பு அச்சாகி யுள்ளது.

க. நா. சு. வின் ட்டுரையில் பக்கம் XXIX இல் "1926இல்" என்பது அச்சுப்பிழை "1936 இல்" என்பதே சரியானது.

'புரட்சிப் மனப்பான்மை' எனக் கதைத் தலைப்பிலேயே (பக். 465) அச்சுப்பிழை காணப்படுகிறது.

மேற்குறித்த குறைகள் ஒரு மேலோட்டமான பார்வையில் அகப்பட்டவை.

இவ்வெளியீட்டு முயற்சியின் வணிக ரீதியான வெற்றியே, அடுத்தடுத்த 'புதுமைப்பித்தன் படைப்புகள்' தொகுதிகளும், மற்ற தரமான படைப்பாளிகளின் தொகுதிகளும் வெளிவர வழிவகுக்கும். எனவே, தமிழிலக்கிய ரசிகர்கள், படைப்பாளிகள், தமிழில் எழுதுகிறவர்கள், தமிழாசிரியர்கள், தமிழ் மாணவர்கள், தமிழ்ப்பட்டதாரிகள் – அனைவரும் இத் தொகுதியை வாங்க முயலுதல் வேண்டும்.

— பா. மதிவாணன்,

எச்சரிக்கை !

விமரிசகர்களுக்கு ஒரு வார்த்தை. வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும், அவை உங்கள் அளவு கோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல ; நான் பிறப்பித்துவிட்ட ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல. உங்கள் அளவு கோல்களைத் தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்.

23—12—43 புதுமைப்பித்தன்

[காஞ்சனை முதலிய கதைகளுக்குப் புதுமைப்பித்தன் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"மயேச்சுரர் கூறும் யாப்பியற் செய்திகள்"

புலவர். இராம. இராமமூர்த்தி, M. A. M. Ed.,
அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி,
காரைக்கால்.

"இருசீர் நாலடி மூன்றிணைத் தோன்றி
வருவது வஞ்சித் தாழிசை, தனிநின்

றொருபொருள் முடிந்தது துறையென மொழிப" என்ற நூற்பாவான் வஞ்சித்தாழிசையும் துறையும் சுட்டப்படுகின்றன. ஆனால், வஞ்சி விருத்தம் குறிக்கும் நூற்பா காணப்பட்டிலது.

இவ்வாசிரியர், எவ்வகைப்பாவும் தன் சீரனும், தளையானும் வருதலை இன்பா என வழங்குகின்றார். தன் சீரானும் பிறசீராதும் விரவி வருதலை இடைவகைப்பட்ட நிலைமைத்தெனவும், பிறசீரான் மட்டுமே வருதலைக் கடைநிலைத்தெனவும் வழங்குகின்றார்.

கிடைத்துள்ள நூற்பாக்களுள் ஓரிரண்டு நூற்பாக்கள், கூறியது கூறலாக அமைந்துள்ளன. இருப்பினும் மயேச்சுரர் யாப்பியல் நூற்பாக்கள், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் பெரிதும் போற்றப்பட்டு, எடுத்தாளப்பட்டுள்ளன. இதனை யெண்ணுங்கால், மயேச்சுரர் யாப்புநூல் பெற்றிருந்த செல்வாக்கினைத் தெள்ளிதின் உணரலாம். இந்நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறாமை யாப்புலகிற்கு ஒரு பெருங்குறையே. எனினும், அறிஞருலகம் மேலும் நன்காய்ந்து, இந்நூலை வெளியிடின் தமிழிலக்கண உலகிற்குப் பேருதவி புரியும்; தமிழ் யாப்பின் வளர்ச்சியும், சிறப்பும் மேலும் பொலிவு பெறும்.

மேற்கோள் நூல்கள் :

1. அபிதான சிந்தாமணி (ஆ. சிங்காரவேலு முதலியார் Asian EDNL Services New Delhi 1986.
2. இளங்குமரன், புலவர். இரா. (விள. ஆ), 'காக்கை பாடினியம்', சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 1., 1974.
3. வேணுகோபாலப்பிள்ளை, மே. வீ., (பதி), 'யாப்பருங்கலம்', தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்தொழில் கட்டுப் பாட்டு அதிகாரி, சென்னை, 1960.
4. வேங்கடசாமி நாட்டார், ந. மு. (பதி), 'யாப்பருங்கலக் காரிகை', சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 1, 1959.

டாக்டர் இரா. சண்முகவேலன்
எம்.ஏ., எம்.பில்., பி.டி., பிஎச்.டி
தமிழ்த்துறை, அ. வீ. வா. நி.
திரு புட்பங் கல்லூரி, பூண்டி.

இயக்கங்கள் :

1. தனித்தமிழ் இயக்கம்

மேலை நாடுகளில் கலை - இலக்கியங்களில் பல இயக்கங்கள் (Movements) தோன்றியிருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மை யானவை உத்திகளின் பெயர்களினாலேயே அழைக்கப்படுகின்றன. குறியீட்டியல் (Symbolism), படிமம் (Imagism), வெளிப்பாட்டுப் பாங்கியல் (Expressionism), கருத்துப் பதிவுக் கலைத்திறம் (Impressionism) போன்றவை சான்றுகளாகும். எனவே, மேலைப் புலத்தார் கலை-இலக்கியங்களில் கையாளப் பெறும் உத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை வளமாக்கியதைப்போல், நம்மவர்கள் இலக்கிய இயக்கங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தந்தாரிலர் என்றாலும் வேறுவேறு நோக்கங்களுக்காகத் தோற்று விக்கப் பெற்ற இயக்கங்களினூடே இலக்கிய இயக்கத்தினையும் ஒரு கூறாக்கி வளர்த்தனர் என்பது குறிப்பிடற்குரியது. இந்நிலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இலக்கியத்திற்கென்றே ஓர் இயக்கம் தோன்றியதை இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது. 1916-இல் மறைமலை அடிகளாரின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த தனித்தமிழ் உணர்வு வளர்ந்து தனித்தமிழ் இயக்கமாய் (1917) மலர்ந்தது. இவ்வியக்கம் எல்லா மட்டத்திலும் தமிழ் ஒன்றுக்கே முதலிடம் தரப்பட வேண்டும் என்கிற கொள்கையோடு மட்டும் அமையாமல் பிறமொழி விலக்கும் கொண்டிருந்தது.

> மறைமலையடிகளாரின் தனித்தமிழியக்கம் தமிழ்த் தாயின் நெஞ்சு புரையோடாதும், தமிழர் அறை போகாதும் காத்தது. தமிழின் வயிற்றிலிருந்து முன்பு பல திராவிட மொழிகள் கிளைத்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துள் ஒரு புதிய திராவிடமொழி பிறந்து தமிழை இன்னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது.[121]

என்றும்,

> தனித்தமிழ் இயக்கத்தின் நோக்கம் பிறமொழி வெறுப்போ, புறக்கணிப்போ அன்று. பிறமொழிக்

ஐம்பொறி நுகர்ச்சிகள்

வித்துவான், ந. மு. கோ. சாமிநாதன், B. O. L.
17/18, ஆதிசேஷன் நகர்,
(ஸ்டேட் பாங்கு காலனி அருகில்)
மருத்துவக்கல்லூரி நெடுஞ்சாலை,
தஞ்சாவூர்-7.

மானிடப் பிறவியெடுத்த நாம் எல்லோரும் எல்லா இன்பங்களையும் முழுமையாகத் துய்த்து வாழ வேண்டும் என்று நினைக்கிறோம். இன்பங்கள் என்பன ஐம்புல நுகர்ச்சியால் கிடைக்கப் பெறுவன என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மையாகும். ஆனால் நமது சைவ சமய நூல்கள் யாவும், 'ஐம்புலன்களை அடக்க வேண்டும்; அடக்கினால்தான் வீட்டின்பம் என்று கருதப்படுகின்ற பேரின்பத்தையடைய முடியும் என்று கூறுகின்றன. ஐம்புல நுகர்ச்சிகளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை நீக்கிவிட்டால் எஞ்சியிருக்கும் உணர்ச்சி எதுவும் இல்லை; அங்ஙனமிருக்கும்போது பேரின்ப நுகர்ச்சியென்பது யாதாக இருக்க முடியும் என்பது கற்பனைக் கெட்டாத ஒன்றாக இருக்கிறது. இதற்கு நாம் கூறக்கூடிய அமைதி, "பேரின்ப நுகர்ச்சி எவ்வாறிருக்கும் என்பதை, 'மலர்மிசை யேகினான் மாணடியைச் சேர்ந்து வீட்டுலகமாகிய நிலமிசை வாழ்வார்' மட்டுமே அறிவர்; நாம் எல்லோரும் அறிய மாட்டோம்" என்பதாம். ஆங்ஙனமானால் ஒரு மனிதன் ஐம்புலன்களையும் அடக்க முடிந்து அடக்கி விட்டானானால் அவ்வாறு அடக்கியபிறகு அவன் ஐம்பொறி களினாலும் நுகரக்கூடிய எந்த இன்ப நுகர்ச்சியையும் பெற இயலாது என்று கொள்ள முடியுமா? இந்தக் கேள்விக்கு விடையளிப்பது சிறிது கடினமாகும். ஏனெனில் எழுவகைத் தாதுக்களால் ஆகிய உடம்பு ஏதாவது ஒரு பக்குவ நிலையில் ஐம்பொறிகளினாலும் நுகரக்கூடிய இன்ப நுகர்ச்சிகளைப் பெறாது இருக்க முடியும் என்பது உடல் இயல் (Physiology) நூலோர் ஒப்புக் கொள்ளாத ஒரு கொள்கையாகும். மேலும் இன்பத்தை நுகராத உடம்பு பிணமாகத்தான் இருக்க முடியும் என்று அவர் கூறுவர். அங்ஙனமானால் ஐம்புலன் அடக்கியவர் பெறக்கூடிய இன்ப நுகர்ச்சியாதாக இருக்க முடியும் என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு விடையாக என் சிற்றறிவுக்கு எட்டிய சில கருத்துக்களைக் கூறுகின்றேன்.

ஐம்பொறிகள் என்பன சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் உணர்ச்சிகளை நுகரக்கூடிய அல்லது அறியக்கூடிய அறிகருவிகள். ஐம்புலன்கள் என்பன 'தன் மாத்திரை' என்று

கூறப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகிய உணர்ச்சிகள். திருக்குறள் கடவுள் வாழ்த்தில்'

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

எனவரும். குறளில் வள்ளுவர், 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்று தான் கூறியிருக்கிறாரேயல்லாமல் 'பொறி ஐந்தவித்தான்' எனக் கூறவில்லை. ஆதலால் பொறிகளை அவிக்கச் சொல்லவில்லை; பொறிகளின் வாயில்களாகிய ஐந்து அவாவினையும் தான் அவிக்கச் சொல்லியிருக்கிறார் என்பது தெளிவு. இக்குறளின் உரையில் பரிமேலழகர் புலனையும், அவாவினையும் வேறுபடுத்திக் கூறினாரேனும் புலனும், அவாவும் வெவ்வேறு அல்ல; அவையிரண்டும் இரண்டறக் கலந்துள்ள நிலையில் ஒன்றேயென்பதை ஔவைக் குறளில் 'பிறப்பின் நிலைமை' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

ஓசை பரிசமுருவஞ்சுவை நாற்ற
மாசைபடுத் துமளறு

என்னும் குறளிலிருந்தும், திருமந்திரம் 'ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை' என்னும் தலைப்பின் கீழ் வரும்,

கைவிடலாவ தொன்றில்லை கருத்தினுள்
எய்தியவனையிசையினால் ஏத்துமின்
ஐவருடைய அவாவினில் தோன்றிய
பொய்வருடைய புலன்களும் ஐந்தே

என்னும் செய்யுளிலிருந்தும் அறியலாம். இச் செய்யுளில், 'கைவிடலாவ தொன்றில்லை' என வரும் சொற்களுக்குப் 'பொறிகளை அவிக்கவேண்டிய இன்றியமையாமையில்லை' எனப் பொருள் கொள்ளினும் அமையும். 'ஐவருடைய' என்னும் சொல்லுக்கு 'ஐம்பொறிகளுடைய' எனப் பொருள்கொள்வோமானால் 'பொய்வருடைய' என்னும் சொல்லின் பொருளைத் துணையாகக் கொண்டு 'ஐம்பொறிகளின் அவாவினில் பொய்யாகத் தோன்றிய ஐம்புலனும்' என்று பொருள் கொண்டு விடலாம். இதிலிருந்து ஐம்பொறிகளின் உண்மையான நுகர்ச்சிகள் வேறு உள என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து, ஔவைக் குறளில் 'அங்கிதாரணை' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

ஐயைந்துமாய வகத்துளெறிநோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம்

என்னும் குறளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரை 'இருபத்தைந்து தத்துவங்களும் ஒழிய சரீரத்திலுள்ளே மூலாக்கினியைத் தரிசித்தால் ஐந்து பொய்களும் வெளியாகிப் போகும்' என்பதாம். இக்குறளில் 'பொய்யைந்தும்' என்னும் சொற்களுக்குப் 'பொய்யான புலன்கள் ஐந்தும்' எனப்பொருள் கொண்டால் ஐம்பொறிகளுக்கும் உண்மையான நுகர்ச்சிகள் வேறு உள எனக் கொள்ள முடியும்.

உரனென்னுந் தோட்டியான்ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

என்னும் குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர், 'பொறிகளாகிய யானையைந்தனையும் தத்தம் புலன்கள்மேற் செல்லாமற் காப்பான்' என்று கூறி அவாவினையுடைய பல நுகர்ச்சிகளைத் தான் நீக்குமாறு கூறுகின்றாரேயன்றி ஐம்பொறிகளும் பெறக்கூடிய தூய்மையான நுகர்ச்சிகளை நீக்கச் சொல்லவில்லை.

அடுத்ததாகத் திருமந்திரம் 'ஐந்திந்திரியம் அடக்கும் அருமை' என்னும் தலைப்பின் கீழ் வரும்,

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும் போய் மேய்ந்து தம் அஞ்சகமே புகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே

என்னும் செய்யுளில் 'அஞ்சு சிங்கம்' என்னும் சொற்களுக்கு 'ஐம்பொறிகள்' எனப் பொருள் கொண்டால் 'அஞ்சின் உகிரும் எயிறும்' என்னும் சொற்களுக்கு 'ஐந்துபொறிகளையும் பற்றியுள்ள ஐந்தவாவும்' எனப் பொருள் கொள்ள அமையும். அங்ஙனம் பொருள் கொள்ளும்போது, 'ஐந்தவாவாகிய அஞ்சின் உகிரையும் எயிற்றையும்' அறுக்குமாறு திருமூலர் கூறியிருக்கிறாரேயல்லாமல் 'ஐம்பொறிகளாகிய அஞ்சுசிங்கங்களையும் கொல்லுமாறு அவர் கூறவில்லை. (உலகத்தில் மக்கள் கொடிய விலங்காகிய சிங்கத்தைக் கொல்லத்தான் நினைப்பார்களேயன்றி அதன் உகிரையும் எயிற்றையும் அறுக்த நினைக்க மாட்டார்கள்).

மேற்கூறிய செய்யுளுக்கு அடுத்ததாக வரும்,

ஐவர் அமைச்சருள் தொண்ணூற்றறுவர்கள்
ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்
ஐவருமைந்து சினத்தொடே நின்றிடில்
ஐவர்க்கிறை யிறுத் தாற்றகி லோமே

என்னும் செய்யுளில் 'ஐவரும்' என்ற சொல்லுக்கு 'ஐந்து பொறி களும்' எனப் பொருள் கொண்டால் 'ஐந்து சினம்' என்ற சொற்

களுக்கு 'ஐந்த வாவும்' எனப் பொருள் அமையும், 'ஐவரும் ஐந்து சினத்துடன் நிற்கும் நிலையில் அவர்களுக்கு இறையிறுத்து அவர்கள் மனத்தை நிறைவு செய்ய முடியாது' எனப்பொருள் கொண்டு ஐம்பொறிகளும் ஐந்தவாவாகிய ஐந்து சினத்தோடு இருக்கும் நிலையில் அவ்வைந்து பொறிகளையுமுடைய மனத்தையும் அதற்கேற்ற ஐம்புல நுகர்ச்சிகளைக் கொடுத்து நிறைவு செய்ய முடியாது' எனப்பொருள் கொள்ள அமையும். ஐம்பொறிகளும் சினத்துடன் இருக்கும் நிலை என்று ஒன்றிருக்கும்போது சினத்துடன் இல்லாத நிலை என்றும் ஒன்று இருக்குமல்லவா ? அச்சினத்துடன் இல்லாத நிலையே ஐம் பொறிகளும் தூய்மையான அல்லது உண்மையான நுகர்ச்சிகளை நுகரும் நிலை என்று கொள்ளலாகும்.

அடுத்ததாகத், திருக்குறளில் 'அவாவறுத்தல்' என்னும் அதிகாரத்தின் கீழ்வரும்,

தூ உய்மை யென்பத வாவின்மை மற்றது
வா அய்மை வேண்டவரும்

என்னும் குறளில், 'தூஉய்மையென்பது 'அவாவின்மை' எனவரும் சொற்களுக்கு. 'ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவா இல்லாமை'' என்று பரிமேலழகர் உரை கூறியிருப்பதனால் அவாவினை நீக்கிய பொறிகளின் தூய நுகர்ச்சிகளே 'தூஉய்மை' யென்னும் பெயரைப் பெறும் என்றும், அத் 'தூய்மை' நிலையே 'வீடு' என்ற பெயரையும் பெறும் என்பது புலனாகின்றது.

அடுத்ததாக அதே அதிகாரத்தின் கீழ்வரும்,

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் யெடின்.

என்னும் குறளுக்கு உரையெழுதும் பரிமேலழகர், 'அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின் அவன் வீடு பெற்ற வழியேயன்றி உடம்பொடு நின்ற வழியும் இன்பம் இடையறாது' என்று கூறுகிறார். இதிலிருந்து அவாவினைக் கெடுத்த பிறகு பொறிகள் நின்ற உடம்பே இன்பத்தை நுகரமுடியும் என்று ஐயத்திற்கு இடமில்லாமல் விளங்குகின்றது. சிறப்புரையில் பரிமேலழகர், அது கெட்டார்க்கு மனந்தடுமாறாது நிரம்பி நிற்றலான்' என்று கூறியிருப்பதனால் அவ்வின்பமும் மனத்தடுமாற்றம் இன்மையால் மனம் நிரம்பிய இன்பம் என்பது தெளிவாகின்றது. மேலும் உரையாசிரியர் 'அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவர்' என்று கூறியிருப்பதனால் ஒருவன் உடம்பொடு நின்றே அவாவிலிருந்து விடுதலை அடைவதோடன்றியும் மனம் நிரம்பிய இன்பத்தையும் பெற முடியும் என்பது விளங்குகிறது.

அடுத்ததாக அதே அதிகாரத்தின் கீழ்வரும்,

ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

என்னும் குறளின் உரையில் 'ஒருகாலும் நிரம்பாத இயல்பினை யுடைய அவாவினை' எனவரும் சொற்களினால் அவா ஒருகாலும் நிரம்பாத இயல்புடையது என்றும், 'அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைக் கொடுக்கும்' எனவரும் சொற்களினால் வீட்டின்பம் என்பது ஏற்ற இறக்கமில்லாமல் எப்பொழுதும் நிரம்பிய இயல்புடையது என்றும் விளங்கும்.

அடுத்ததாகத் திருக்குறளில் 'அடக்கமுடைமை' என்னும் அதிகாரத்தின் கீழ்வரும்,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து

என்னும் குறளில் 'ஐந்தடக்கலாற்றின்' என்னும் சொற்களுக்கு, 'ஐம்பொறிகளையும் அடக்க வல்லனாயின்' எனப் பரிமேலழகர் கூறும் உரையிலிருந்து துறவறத்தார்க்கேயன்றி இல்லறத்தார்க்கும் புலனடக்கம் இன்றியமையாதது என்பது புலப்படுகின்றது. இதை மறுத்துப் "புலனடக்கத்தைப் பரிமேலழகர் கூறவில்லை; ஏனெனில் அவரே சிறப்புரையில், 'ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்க வேண்டுமென்பார்' எனக் கூறியிருப்பதனால் பாவ நீக்கத்தைத்தான் கூறினார்' என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில் பாவத்தின் தோற்றமே புலனடக்கம் இல்லாமையினால் தான் உண்டாகிறது என்பதைத் 'துறவு' என்னும் அதிகாரத்தின் கீழ்வரும்,

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டியவெல்லாம் ஒருங்கு

என்னும் குறளுக்குச் சிறப்புரையெழுதும் பரிமேலழகர், "புலமென்றது அவற்றை நுகர்தலை; அது மனத்தைத் துன்பத்தாலும் பாவத்தாலுமன்றி வாராத பொருள்கள் மேலல்லாது வீட்டு நெறியாகிய யோக ஞானங்களிற் செலுத்தாமையின், 'அதனை யடல் வேண்டு' மென்றும் கூறினார்' என்று கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் இக்குறளின் உரையில், 'ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன் களையும் கெடுத்தல் வேண்டும்' என்று தான் கூறியிருக்கிறாரே யன்றி ஐம்பொறிகளையும் கெடுத்தல் வேண்டும் என்று

கூறவில்லை. மேலும் சிறப்புரையில், "அஃது அப்பொருள்கள் மேற்செல்லின், அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின் 'வேண்டியவெல்லாம் ஒருங்கு விடல் வேண்டு' மென்னும் கூறினார்" என்று எழுதியிருப்பதிலிருந்து, புலனுகர்ச்சி யென்பது தழலைப்போன்று வெம்மையானது என்பது புலனாகின்றது. 'விறகு' என்பது 'ஐம்பொறிகள்' ; 'தழல்' என்பது 'வெம்மையோடு கூடிய ஆசை' என்று பொருள்படும் 'அவா' ; பொறிகளோடும் வெம்மையான ஆசை கூடும் பொழுது வெம்மை யான புலனுகர்ச்சிகள் உண்டாகின்றன. மேற்கூறிய 'ஒருமையுள்', எனத்தொடங்கும் குறளில் 'ஐந்தடக்கலாற்றின்' எனவரும், சொற்களுக்கு 'ஐம்பொறிகளையும் அடக்க வல்லனாயின்' எனப் பரிமேலழகர் கூறும் உரையிலிருந்து, புலனடக்கம் துறவறத்தார்க்கு ஒருதலையான இன்றியமையாமையையுடையது என்பதும் இல்லறத்தார்க்கும் இயன்றவரையில் இன்றியமையாமையை யுடையது என்பதும் விளங்குகிறது.

திருக்குறள் 'அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் கீழ்வரும்

சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பது அறிவு.

என்னும் குறளுக்கு, 'மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல விடாது அப்புலத்தின் நன்மை தீமைகளையாராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு' என உரையெழுதுகிறார் பரிமேலழகர். இவ்வுரை புலனடக்கத்தைக் குறிப்பதாகாது என்பதை உணரவேண்டும். மனத்தை நல்ல புலத்தின்கட் செலுவதும் அவாவினைக் கொண்டதேயாகும் என்பதைக் 'கடவுள் வாழ்த்தில்' வரும்,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்னும் குறளின் சிறப்புரையில், "நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான், 'இருவினையுஞ் சேரா' வென்றும் கூறினார்" என்று பரிமேலழகர் கூறுவதினின்றும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆதலின் நல்வினை அறிவைச்சார்ந்த தாகுமேயன்றிப் புலனடக்கத்தைச் சார்ந்ததாகாது என்பது விளங்கும்.

இனி 'உடம்பின் பயன்' என்னும் தலைப்பின் கீழ் 'ஔவைக் குறள்' கூறும் கருத்துக்களைக் கீழே காண்போம் :

அந்நூல் 10 குறட்பாக்களில் கூறும் 'உடம்பின் பயன்களுக்கு' 10 தலைப்புக்கள் கொடுத்து வரிசைப்படுத்தலாம். அவையாவன

1. அவாவின் தோற்றம் 2. அவாவின் வளர்ச்சிக்கு உடம்பே காரணம் என்பது 3. அவாவினால் புலன்கள் உண்டாயின என்பது 4. புலனுகர்ச்சிகளை விட்டொழிதல் 5. உயிர்க்குறுதி தேடுதல் 6. மனமாசு அறுதல் 7. சங்கரனைச் சார்தல் 8. ஈசனைத் தேடுதல் 9. முதல்வனைக் காணுதல் 10. உத்தமனைக் காணுதல் மேற்காட்டிய வரிசையில் வரும் குறட்பாக்களையும் அவற்றிற்குரிய உரைகளையும் கீழே காணலாம் :

1. ஓசையுணர்வுகளெல்லாம் தருவிக்கும்
நேசத்தாலாய வுடம்பு

சத்தம் முதலிய உணர்ச்சிகளையெல்லாம் ஸ்திரீ புருஷர்களது நேசத்தினாலேயான சரீரமானது உண்டாக்கும். இங்ஙனம் உண்டாகிய ஐம்புலன்களும் மீண்டும் மீண்டும் ஆண்பெண் உறவுக்கே பயன்படுகின்றன என்பதைத் திருக்குறள் காமத்துப்பால் களவியல் 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் அதிகாரத்தின் கீழ்வரும்,

கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலனும்,
ஒண்தொடி கண்ணே உள

என்னும் குறளின், 'கண்ணாற்கண்டும் செவியாற் கேட்டும் நாவாலுண்டும் மூக்கால் மோந்தும் மெய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும் இவ்வொள் ளியதொடியை உடையாள் கண்ணே உளவாயின' எனவரும் உரையினின்றும் அறியலாம்.

2. உடம்பினாலன்றியுணர்வு தானில்லை
உடம்பினாலுன்னியதேயாம்

சரீரத்தினால் உணர்ச்சியுண்டாவதேயல்லாமல் மற்றதினால் உண்டாவதில்லை.

3. உணர்வாவவெல்லாமுடம்பின் பயனே
யுணர்கவுணர்வுடையார்

சரீரங்களின் பயனே ஆன்மாக்களுக்குண்டாகும் உணர்ச்சியாம். ஆனதால் உணர்வுடையோர் உணர வேண்டியதாம்.

4. பிறப்பினாற் பெற்ற பயனாவ வெல்லாந்
துறப்பதாந் தூநெறிக்கட்சென்று

ஜன்மத்தினால் பெறப் பெற்ற பிரயோஜனங்களையெல்லாம் உயர்ந்து பரிசுத்தமாகிய மார்க்கத்திற் போய் சகல இன்பங்களையும் விட்டொழிவதாகும்

5. உயிர்க்குறுதியெல்லாமுடம்பின் பயனே
அயிர்ப்பில் றியாதியை நாடு.

உயிர்க்கு உறுதியைச் சரீரமானது தருவதால் அதையே ஆதாரமாகக் கொண்டு சிவபெருமானையடைய விரும்பு.

6. மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக்கால்
ஈசனைக் காட்டுமுடம்பு

குற்றமற்ற குணமானது மனத்தில் உண்டானால் சரீரமானது சர்வேஸ்வரனை உணர்விக்கும்.

7. ஒரு பயனாவதுடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச்சார்

நமக்கு ஒப்பற்ற பிரயோஜனமாவது சரீரத்தினது பயனேயாகும்; அந்தப் பிரயோஜனத்தைக் கொடுங்கும் படியான சிவபெருமானை யடைதலாம்.

8. உடம்பினாற் பெற்ற பயனாவவெல்லாம்
திடம்பட வீசனைத்தேடு

சரீரத்தைப் பெற்ற எல்லாப் பிரயோசனங்களும் உறுதியாக உள்ளே ஈசனை ஆராய்வதாகும்.

9. அன்னத்தாலாயவுடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும்

அன்னசத்துவால் உண்டான சரீரத்தின் பிரயோசனமெல்லாம் முதல்வனாகிய கடவுளைக் காட்டுவிக்கும்.

10. உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லா
முடம்பினிலுத் தமனைக்காண்

சரீரத்தைப் பெற்ற பிரயோசனமாவதெல்லாம் சரீரத்திலுள்ள உத்தமனென்னும் ஈஸ்வரனை அறிவதற்காகும்.

இனி அடக்கப்படவேண்டிய புலனுகர்ச்சிகள் உடம்பின் பயனாகவும் கருதப்பெறும் என்பதைத் திருக்குறள் 'கடவுள் வாழ்த்தின்' கீழ்வரும்,

கோளில் பொறியில் குணமிலவே என்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், 'தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதலுடைய வல்ல எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள்' என உரை எழுதுவதினின்றும் தெரிந்து

கொள்ளலாம். இனி, இதைமறுத்து இல்வாழ்வார்க்குப் புலன்களைக் கொள்ளையுடைய பொறிகள் பயன்படுதலையுடைய என்பதனாலேயே இங்ஙனம் உவமை கொண்டார் என்றும், வீட்டை நோக்குவார்க்குப் புலனடக்கமே தேவை என்பதுதான் வள்ளுவர் கொள்கை என்றும் கொள்ளினும் புலனடக்கத்தை வலியுறுத்த வேண்டிய 'கடவுள் வாழ்த்தில்' இங்ஙனம் உவமை கொள்வது பொருந்தாது; ஆகலின் திருவள்ளுவரும் புலனுகர்ச்சிகளை உடம்பின் பயனாகவே கருதுகிறார் என்றுதான் கொள்ளவேண்டும்.

இனி அடக்கப்படவேண்டிய புலன்கள் பயன்படுதல் எவ்வகையில் என்பதனை அறிய வேண்டும். திருக்குறளில் 'அவாவறுத்தல்' என்னும் அதிகாரத்தின் கீழ்வரும்,

> ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
> பேரா இயற்கை தரும்.

என்னும் குறளுக்கு, 'ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின் அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைக் கொடுக்கும்' எனப் பரிமேலழகர் உரையெழுதுகிறார். 'நிரம்பாமையாவது தாமேயன்றித் தம் பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல்' எனச் சிறப்புரை எழுதுகிறார். இதனால் அவா மேன்மேல் வளர்கிறது என்பது புலனாகிறது; அவா வளரும்போது கூடவே புலனுகர்ச்சிகளும் வளர்கின்றன என்பது ஒருதலை. அடுத்து, "அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக்கவற்சிகளும்—பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப் 'பேராவியற்கை'யென்றும், அஃது அவா நீத்த வழிப்பெறுதல் ஒருதலையாகலின் 'அந்நிலையே தரு'மென்றும் கூறினார்" எனச் சிறப்புரையைத் தொடர்கின்றார். அவா புலன்வழி இன்ப நுகர்ச்சிகளை அளவில்லாமல் வளர்ப்பதில் இழுக்கேதும் இல்லை; ஆனால் மேற்கூறப்பட்ட துன்பங்களையும் கொடுப்பதனால் தான் இழுக்குண்டாகிறது; அங்ஙனம் துன்பம் கொடுப்பதனால் தான் அவா நிலையற்றதாகக் கருதப் படுவதோடன்றியும் அதனால் விளையும் பயனும் நிலையற்றதாகக் கருதப்படுகிறது; அவாவுக்கு வேண்டிய பொருள்களும் வேண்டாதனவாகக் கருதப்படுகின்றன; இழுக்காகக் கருதப்பட வேண்டாத 'நிரம்பாமை'யும் இழுக்காகக் கருதப்படுகிறது. இனி மேற்கூறியவாறு புலனுகர்ச்சிகள் வளர்ந்த நிலையில் ஒருவன் அவாவினை நீக்குமாயின் அந்நிலையே அதாவது அவாவினை

நீக்கிய பிறகு புலநுகர்ச்சிகள், நுகர்ச்சிகளின் அளவில் ஏற்றமோ இறக்கமோ இல்லாத அந்நிலையிலேயே என்ஞான்றும் இருக்கக் கூடிய இயல்பைக் கொடுக்கும் எனப் பொருள் கொள்ளுதல் சாலச் சிறப்புடையதாயிருக்கும்; இதனாலேயே 'பேரா இயற்கை'யதாகிய வீட்டினைப் பேரின்பம் எனக் கூறுகின்றனர். அவாவினால் வளர்க்கப்பட்ட புலநுகர்ச்சிகளின் வளர்ச்சி 'உடம்பின் பயனா'கக் கருதப்படுகிறது என்பதை உணரலாம்.

அவாவினை நீக்கிய பிறகு புலநுகர்ச்சிகளில் வெம்மையிராது; தண்மையிருக்கும். ஆனால் நுகர்ச்சிகள் அவாவினை நீக்குமுன் இருந்த அளவினவாகவேயிருக்கும்; இதுவே பேரின்பம்.

இனி அவாவினை அறுத்தல் எங்ஙனம் என்பதை மேற்காட்டிய 'அடல் வேண்டும்' எனத் தொடங்கிய குறளின் சிறப்புரையில், 'வீட்டு நெறியாகிய யோக ஞானங்களிற் செலுத்தாமையின்' என வரும் சொற்களினால் அறியலாம். வீட்டு நெறியாகிய யோகத்தைப் பற்றித் திருமந்திரம் ஐந்தாந்தந்திரத்தில் 'யோகம்' என்னும் தலைப்பின் கீழ் வரும்,

பூவினிற் கந்தம் பொருந்திய வாறு போற்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்த றிவாளர்க்கு
நாவியணைந்த நடுத்தறியாமே.

எனவரும் செய்யுளால் அறிந்து கொள்ளலாம். 'பூவினுள் மனம் கூடியிருப்பதுபோல யோகியின் உயிருக்குள்ளே சிமாகிய மணம் பூத்தது' எனக் கொள்ளலாகும் பொருளை இச் செய்யுளுள் காணலாம்.

அடுத்து,வீட்டு நெறியாகிய ஞானத்தைப்பற்றி ஔவைக்குறள் திருவருட்பால், 'கலைஞானம்' என்னும் தலைப்பின்கீழ்வரும்,

ஈசனோ டொன்றிவி சையாப் பொருளில்லை
தேச விளக்கொளியே யாம்.

என்னும் குறளுக்கு, 'இறைவன் தேசங்களுக்கெல்லாம் பிரகாசமா யிருப்பதால் அவனோடு ஒன்று கலந்து ஏகரூபமானவர்களுக்கு எல்லாப் பொருளும் கைகூடும்' எனவும், அதே தலைப்பின் கீழ் வரும்

தாஞ்செய் வினையெல்லாந் தம்மையற வுணரில்
காஞ்சன மேயாகுங் கருத்து

என்னுங் குறளுக்குத் 'தன்னைத்தான் அறிந்தவர்கள் எப்படிப்பட்ட

வினைகளைச் செய்திருப்பினும் அவையெல்லாம் ஒழிந்து களங்கமற்ற பொன்போன்ற மனத்தையுடையராவார்கள்' எனவும், அதே தலைப்பின் கீழ்வரும்,

வீடகமாக விழைந் தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று

என்னும் குறளுக்கு, 'மோட்சமடைய ஆசைப்பட்டுச் சீக்கிரமாக விரும்புவார்களானால் கூடப்பிரமத்தினுடன் கலந்திடுவாயாக,' எனவும், அதே தலைப்பின் கீழ்வரும்,

பூரித்த நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து

என்னும் குறளுக்கு, 'எங்கும் வியாபகமான சிவபெருமானோடு கூடினால் மனமானது பரிசுத்தமுடையதாகும்' எனவும், அதே தலைப்பின் கீழ்வரும்,

இரேசக மாற்றி யிடையறாதே நிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம்.

என்னும் குறளுக்கு, 'இரேசகத்தைச் செய்து இடையில் விடாமலிருந்தால் சிவபெருமான் உள்ளே நிறைந்து விளங்கப்பட்டவன் ஆவான்' எனவும்,

ஔவைக்குறள் தன்பால் 'ஞான நிலை' என்னும் தலைப்பின் கீழ்வரும்

அழியா வுயிரை யவனுடன் வைக்கில்
பழியான தொன்றில்லை பார்

என்னும் குறளுக்கு 'நிலையான ஆன்மாவைப் பரமேஸ்வரனிடத்திலே சேர்த்து வைத்தால் யாதொரு பழியும் வருவதில்லை; அதனையுணர்வாய்' எனவும்,

அதே தன்பாலில் 'ஞானம் பிரியாமை' என்னும் தலைப்பின் கீழ் வரும்.

குருவாம் பரநந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்காதிரு

என்னும் குறளுக்குக் 'குருவாகிய பரமேஸ்வரச் சேர்க்கையை நினைத்து அங்கு இரண்டு வேளையும் பிரியாமலிருக்க வேண்டும்' எனவும் எழுதப் பெற்றிருக்கும் உரைகளினின்றும் வீட்டு

தெறியாகிய யோக ஞானங்களைச் செய்பவன் தன்னையே சிவனாகக் கருதிக் கொண்டால்தான் அவாவினை யறுக்கவியலும் என்பதனைக் காணலாம்.

அடுத்ததாகத் திருமந்திரம், ஏழாந்தந்திரம், 'போதன்' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை யறிகிலர்
சீவனார் சிவனாரை யறிந்தபின்
சீவனார் சிவனா யிட்டிருப்பரே

என்னும் செய்யுளுக்கும், அதனையடுத்த செய்யுளையடுத்து வரும்,

அறிவாய் அறியாமை நீங்கியவனே
பொறிவாய் ஒழிந்தெங்குந்தானான போதன்
அறிவாய வற்றினுட் டானா யறிவன்
செறிவாகி நின்ற அச் சீவனு மாகுமே

என்னும் செய்யுளுக்கும், 'ஆன்மாவும் சிவமும் வெவ்வேறானவை யல்ல; ஆன்மா சிவத்தையறிவதில்லை; அது சிவத்தையறிந்த பின் அதுவே சிவமாகி விடும்' எனவும், 'அறியாமையை நீக்கி அறிவையடைந்தவனே அறிவாயாக; சிவன் பொறிவாயில்களாகிய ஐந்தவாவினையும் ஒழித்து உடலெங்கும் தானேயான போதன் என்பதனையறிவாய்; மேலும் அவன் ஐம்பொறிகளினுள்ளும் தானேயாகிச் சீவனுடன் இரண்டறக் கலந்து நின்ற அறிவனும் ஆவான்' எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

அடுத்ததாக ஔவைக்குறள் வீட்டு நெறிப்பால், 'பிறப்பின் நிலைமை' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

தருமம் பொருள் காமம் வீடெனுநான்கு
முருவத் தாலாய பயன்

என்னும் குறளுக்கு, 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும், சரீரத்தாலுண்டான பிரயோஜனமாம்' எனவும், 'திருவருட்பால்', 'தெரிந்து தெளிதல்' என்னும் தலைப்பின் கீழ் வரும்,

தம்மை யறியாதார் தாமறி வோமென்பதன்
செம்மையா லீசன் நிறம்

என்னும் குறளுக்குத் 'தம்மைத் தாமே யறிவதற்குச் சக்தியில்லாத அறிவிலிகள் சர்வேஸ்வரனுடைய வல்லமையை உண்மையாகத் தாம் அறிவோமென்பது ஏன் ?' எனவும், தன்பால், 'மெய்ந்நெறி' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

இமைப்பிற் பரந்தங் கொடுங்கு மின்போல்
நமக்குட் சிவன் செயல் நாடு

என்னும் குறளுக்கு, 'இமைநேரத்தில் பரவி அப்போதே ஒடுங்கும் மின்னலைப் போல, நமக்குள்ளே சிவபிரானது செயலை விரும்பு' எனவும்,

திருவருட்பால், 'நினைப்புறுதல்' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

மிக்க மனத்தால் மிக நினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுரு வமாம்

என்னும் குறளுக்கு, உயர்வாகிய மனத்தால் அதிகமாக நினைந்து தியானம் செய்தால் ஒப்பற்ற சிவசொரூபத்தை யடையலாம்' எனவும், திருவருட்பால் 'சதாசிவம்' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

ஆகமுஞ் ஜீவனு மாசையுந் தானாகி
ஏகமாய் நிற்குஞ் சிவம்

என்னும் குறளுக்கு, 'சிவப்பொருளானது சரீரமாகிச் சரீரத்திற்குள் ஆன்மாவாகி, இரண்டிற்கும் பொருந்திய ஆசையாகி ஆராயுங்கால் ஒன்றேயெல்லாமாய் விளங்கும் எனவும் கூறப்பெற்றிருக்கும் உரைகளினின்றும் மேற்கூறிய கருத்துகள் வலியுறுத்தப் பெறுவதைக் காணலாம்.

இனி ஒருவன் அவாவினை முற்றிலும் அறுத்துச் சிவனான பிறகு அவனுடைய ஐம்பொறிகளும் நுகரும் நுகர்ச்சிகள் 'பல்குணங்கள்' என்னும் பெயரைப் பெறும் என்பதனைத் திருவருட்பால் 'தெரிந்து தெளிதல்' என்னும் தலைப்பின் கீழ்வரும்,

தேறித்தெளிமின் சிவமொன்றே யுள்ளுணர்வில்
கூறிய பல்குணமுமாம்.

என்னும் குறளுக்கு, 'உள்ளுணர்ச்சியில் சிவபெருமான் என்னும் வஸ்து, சொல்லும் பல குணங்களிலும் கலந்துள்ளதென்று ஆராய்ந்து தெளிவடையுங்கள்' எனக் கூறப் பெற்றிருக்கும் உரையிலிருந்து அறியலாம்,

மேலும், மேற்காட்டிய 'சிவனென' எனவும், 'அறிவாய்' எனவும் தொடங்கிய திருமந்திரச் செய்யுட்களுக்கு இடையில் வரும்.

குணவிளக்காகிய கூத்தப் பிரானும்
மனவிளக்காகிய மன்னுயிர்க்கெல்லாம்
பணவிளக்காகிய பல்தலைநாகங்
கணவிளக்காகிய கண்காணியாகுமே

என்னும் செய்யுளின் இரண்டாவது அடிக்கு, 'ஞானேந்திரியங் களாகிய மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் இந்திரியங் களைக் கொண்ட மனவிளக்காகிய நிலை பெற்ற உயிர்க்கெல்லாம்' எனவும், முதல் அடிக்கு, 'அவாவினை முற்றிலும் அறுத்துப்பெற்ற ஐம்பொறி வழிவந்த உணர்ச்சிகளாகிய பல்குண விளக்காகிய கூத்தப்பிரானும்' எனவும் கொள்ளலாகும் பொருள் மேற்கூறிய 'தேறித்தெளிமின்' எனத்தொடங்கிய குறளின் உரையை வலியுறுத்துதலைக் காணலாம்.

இனி, மேற்கூறிய 'கோளில்' எனத் தொடங்கும் குறளில், 'கோளில் பொறியின் குணமில' என்னும் சொற்களுக்குத் 'தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் பயன்படாமை போல' எனப்பொருள் கொண்டு 'குணமிலவே என்குணத்தான் தாளை வணங்காத்தலை' என்னும் சொற்களுக்கு 'என்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள் சிவனுக்குரிய பல்குணங்களைப் பெற இயலாமையால் பயன்படுவன வல்ல' எனப்பொருள் கொள்ளுதல் பொருத்தமுடையதாயிருக்கும். இப்பொருளினின்றும் புலன்களைப் பெற்ற பொறிகள் பயன் படுதலைப் பொருத்துதான் 'பல்குணங்களும்' உருவாகின்றன என்பது விளங்கும்.

(ஆவணியிதழ்த் தொடர்ச்சி)

ஐயவினாக்கள்

(பேராசிரியர் ச. பாலசுந்தரம்)

புணரியல்

மெய்யுயிர் முதலீறாம் இருபதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்தியைவது புணர்ப்பே. (புணரியல் — 1)

இருபதங்களுள் பகாப்பதம் பெயர்வினை இடைஉரி நான்கும் முதனிலையளவாக வரும் என்னும் இவர் இலக்கணப்படி இடைச் சொற்களும் தம்முன் தாம் நிலைமொழி வருமொழியாக அமைந்து புணரும் என்றாகிறது. பின்னர் இவர் இடைச் சொல்பற்றி இலக்கணம் கூறுமிடத்து

"...... தனித்தியலின்றிப் பெயரினும் வினையினும் முன்பின் ஓரிடத்து ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்" என்கிறார். இங்ஙனம் கூறுதல் மேற்கோள் மலை வாகாதா? இடைச்சொற்கள் தனித்து வருங்கால் பெயர்த்தன்மையோ வினைத் தன்மையோ எய்திப் பெயர் - வினைகளாக மாறாவழி அவை எவ்வாறு பொருள் தரும்? பொருள்தரின் அவை இடைச்சொல் எனல் தகுமா?

நிலைமொழி வருமொழி என்பவை தொகை இலக்கணப்படி வினைத்தொகையாதல் வெளிப்படை. அம்முறையான் நிலை மொழி என்பதனை விரிப்பின் நிலைத்தமொழி நிலைக்கின்றமொழி நிலைக்கும் மொழி எனப்பொருள் தருதலின்றி நிற்கும் மொழி எனப் பொருள் தருமா? வருமொழி எங்கிருந்து வரும் மொழி? வருதலின் நோக்கம் யாது? எனக்கருதுவார்க்கு விளக்கம் யாது? தொன்னூ லாசிரியர் நிறுத்தசொல் குறித்துவருகிளவி என அறிவியல் முறைப்படி இட்ட குறியீடுகளை இவர் காணவில்லையா? கண்டும் இங்ஙனங்கூறுதலைச் செவ்விதெனக்கருதினாரா?

வேற்றுமை ஐம்முதல் ஆறாம் ஆவ்வழி
தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளியீரெச்சம் முற்று இடையுரி
தழுவுதொடர் அடுக்கு என ஈரேழே (புண — 2)

பெயரியலுள் "வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" என்பவர், எழுவாயும் விளியும் அவ்வழியானமைக்குக் காரணம் கூற

வேண்டாவா ? உவமத்தொகையையும் அன்மொழித் தொகையை யும் விரிக்குமிடத்து வேற்றுமை யுருபுகள் வாராவா? பின்னர் இவர் இரண்டாம் வேற்றுமைக்குரிய இலக்கணங் கூறுமிடத்து

"இரண்டாவதனுருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும்" என்பதனான்.

மதியை ஒக்கும் முகம் எனவும் பொற்றொடியை அணிந்தவள் எனவும் விரிதல் இவர்க்கு உடன்பாடாதல் பெறப்படுதலின் இங்ஙனம் கூறியது பிழையாகாதா ?

விகாரப் புணர்ச்சியை விளக்குங்கால் - தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம் என்கின்றார். விகாரம் என்னும் வட சொற்குப் பொருள் யாது ? திரிபு எனின் மூன்றற்கும் உரியதாகக் கூறிய குறியீட்டினை அவற்றுள் ஒன்றற்குச் சிறப்புக்குறியீடாகக் கூறியது இலக்கண நெறியாகுமா?

தோன்றல் : தோன்றல் என்றது புதுவதாக வேறாகத் தோன்றுதலையா ? முன்பமைந்த மொழியொடு பிறிதொரு எழுத்துக் கூடின் பொருள் வேறுபடல் வேண்டுமே ? அற்றன்று மிகுதலையே தோன்றல் என்றார் எனின் இங்ஙனங் கூறியது மயங்க வைத்தலாகாதா? தொன்னூலாசிரியர் மிகுதல் எனக்குறியீடு செய்துள்ளமையை அறியாரா ?

திரிதல் : திரிதல் என்பதன் பொருள் ஓரெழுந்துத்தானே பிறிதோரெழுத்தாகத் திரியும் என்பதா ? வேறா ? ஒரு சொல்லில் உள்ள எழுத்து வேறுபட்டால் பொருள் வேறுபடாதா ?

கெடுதல் : ஒரு சொல்லின் உறுப்பாக நிற்கும் எழுத்துக்களுள் ஒன்று கெடின் அச் சொற்பொருள் சிதையாதா !

"மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல்" எனத் தொல்காப்பியம் கூறுவதனை இவர் காணவில்லையா ? கண்டும் அக்குறியீடுகளுக்கு அந்நூற்பொருளை அறியாது உரையாசிரியன்மார் கூறியுள்ள போலியுரையை மெய்யுரை எனக்கருதி அவர் கருத்தை ஏற்று இவர் குறியீடு செய்தாரா ? ['மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல்" என்ப வற்றிற்குரிய மெய்யுரையை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு தெளிக.]

மற்று, வலித்தல் மெலித்தல் நீட்டல் முதலிய செய்யுள் விகாரங்களைப் புணரியலுள் கூறியது பொருந்துமா ?

மெய்யுயிர் ஈறாம் இருபதாங்களும் எனக்கூறித்தொடங்கியவர். முன்னர் சார்பெழுத்தாக வேறுபிரித்துக் கூறிய குற்றியலுகரத்தை

யும் சேர்த்து "எண் மூவெழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்" எனக் கூறியது ஏற்புடைத்தாமா? முற்றுகரத்தின் விகாரமே குற்றுகரம் என்பது இவர்கருத்தெனின் பின்னர் முற்றுகரத்திற்கும் - குற்று கரத்திற்கும் வேறுவேறாகப் புணர்ச்சி விதி கூறுபவர் பொதுச் சூத்திரத்துள்ளும் பிரித்துணர்த்த வேண்டாவா?

உருபுபுணரியல் என ஓர்இயல் வகுத்துக் கொண்டவர் உருபுபுணர்ச்சிக்குரிய விதிகளை எல்லாம் ஆண்டுக்கூறாமல் ஆறனுருபு—மூன்றனுருபுகளை உயிரிற்றுப்புணரியலுள் வைத்துக் கூறுவது முறையாகுமா? ஆகுமெனின் இரண்டனுருபையும் நான் கனுருபையும் அவ்வாறு விதந்து கூறாமை குற்றமாகாதா?

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென
வருபெயர் ஐந்தொடு பெயர் முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே (உருபுபுணரியல் 1)
பெயர்வழித்தம் பொருள் தரவரும் உருபே (,, 2)

ஒருவன் முதலாய ஐவகைப் பெயர் ஒவ்வொன்றன் கண்ணும் வரும் உருபுகள் எட்டும் வெவ்வேறுவகையினவா? பெயரியலுள் வேற்றுமை எட்டு எனக்கூறியதன்றி உருபுகள் எட்டென்று கூறி யுள்ளாரா? இவர் கூறும் இலக்கணப்படி மூன்றாவதனுருபு நான்கு, ஐந்தாவதன் உருபு இரண்டு அறன் உருபு மூன்று ஏழனுருபு இருபத்தெட்டு அவற்றையும் வைத்துப்பெருக்காமல் விட்டதேன்? [பிறவினாக்கள் பெயரியல் பற்றிய ஐயத்துள் எழுப்பப்படும்]

பெயர் முதலிருநான்குருபே — பெயர் வழித்தம் பொருள் தர வரும் உருபே — என்றதனான் பெயராகவரும் உருபும் உருபை ஏற்கும் பெயரும் வெவ்வேறு வகையினவா? பெயர் உருபை ஏற்ற பெயர் எவ்வாறு அமைந்திருக்கும்? அற்றன்று எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே" என்றதனான் அதுவே பெயர் அதுவே உருபு எனின் அங்ஙனங் கூறுதல் மயங்க வைத்தலாகாதா? எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே" என்றதனான் இரண்டாம் வேற்றுமை முதலியவை திரிந்த பெயர்கள் என்பது கருத்தா? இவ்வாறு கூறும் முந்து நூல்கள் யாவை?

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர் வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமு மாகும்

பதம் என்றது பகாப்பதம் பகுபதம் இரண்டனையும் மன்றே அவ்வழிப் பகுபதம் என்பது விகுதி முதலியவற்றொடு கூடி நிற்பதன்றே? அதன்பின் பிறிதொரு விகுதி எங்ஙனம் புணரும்? பகாப்பதம் எனின் உருபினை ஏற்கும் பகுபதத்தை நீக்கியது குன்றக் கூறலாகாதா?

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர் — நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]		
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

338 TO 384 PAGES MISSING IN BOOK

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ஆசிரியர் தஞ்சை சரபோஜி
மன்னர் சரஸ்வதி மகால் நூல்
நிலைய
அரண்மனை, தஞ்சாவூர்

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1897/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.